www.lkedu.lk


உயிர் முறைமைகள் தொழில்நுட்பம்

BIO SYSTEMS TECHNOLOGY

க.பொ.த (உயர்தர) தொழினுட்பப் பிரிவு மாணவர்களுக்கான

புதிய பாடத்திட்டத்திற்கமைவானது – 2017 இல் இருந்து











16 வெவ்வேறு தொழில்கள் தொடர்பான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பிரயோகிப்பதற்கான (OSH) ஆய்த்தம்

Compiled

M.N.MUHAMMAD SUFIYAN - JP (SLTS)

T/KIN/MUSLIMLADIES COLLEGE [N.S]

NDinTech Agriculture & Science (VNCoEdu)

B.A (SEUofSL)

PGDE (OUSL) H.P 0776259116

www.lkedu.lk

தேர்ச்சி 1G : **வெவ்வேறு தொழில்கள் தொடர்பான தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பிரயோகிப்பதற்கான (OSH) ஆயத்தத்தை வெளிக்கட்டுவார்.**


1G.1 தொழில் சார்ந்த இடர்களை நுணுகியாய்வார்.

பண்டுதொட்டு இன்று வரையில் வெவ்வேறு வாழ்க்கைத் தொழில்களின் மேம்பாடு

- இருப்பு கருதி மனிதன் வெவ்வேறு வேலைகளில் ஈடுபடுதல்.
- மனிதன் சமூகம் சாரந்தவனாக இருத்தலும் யாதேனும் சிறப்பான ஒரு கருமத்தில் தேர்ச்சி பெற்றிருத்தலும் தேவைகளின்போது பண்டங்களையும் சேவைகளையும் பரிமாறிக்கொள்ளலும் சமூகம் சிக்கார்ந்ததாக மாறும் போது எல்லையற்ற மனிதத் தேவைகளை ஈடுசெய்வதற்காக பண்டங்கள், சேவைகளை உற்பத்தி செய்கினற்மையால் சேவை செய்பவரது **(CopauJ)** கருமம் சிக்கார்ந்ததாக அமைதல்.
- அதிக வேலைப்பளு காரணமாக, தொழிலானது மனிதனின் உடல், உள, சமூக சுகாதரத்தின் மீது தாக்கம் விளைவிப்பதால் தொழில்சார் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக சகலரதும் கவனம் ஈர்க்கப்படல்.

DID YOU KNOW...

- தொழில் மற்றும் சுகாதாரம் ஆகியவற்றுக்கிடையிலான இடைத்தொடர்புகள் முக்கியமானதாகும்.



- தொழில், வாழ்க்கைக்குத் துணையாக அமைகின்றது.
- இதனால் வாழ்க்கைக்கு அச்சுறுத்தல் ஏற்படக்கூடாது.
- பாதுகாப்பான சூழலில் பாதுகாப்பாக தொழிலில் ஈடுபடுவதன் மூலமாக பயன்தரு சேவையை ஆற்றுவதற்கு முடியும்.
- இதனால் தொழிலாளரின் சுகாதாரம் மற்றும் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும.
- இச்சமனிலை குழப்பப்படுவதனால் தொழில் சார்ந்த நோய்கள் ஏற்பட்டுத் தொழிலில் தோல்வி ஏற்படும்.

சுகாதாரத்தின் முக்கியத்துவம்

1) தொழில் செய்வோரின் தனிப்பட்ட சுகநலம், பிறரது சுகநலம் ஆகியவற்றைப் பேணுதல்.
2) சமூக நலத்தைப் பேணுதல்.
3) நிறுவனத்தின் பயன்தரு தன்மையை அதிகரித்தல்.
4) நிறுவனத்தின் நம்பகத்தைப் பேணுதலும் தொழில் செய்வதற்கான ஆர்வத்தை ஏற்படுத்தலும்.
5) நிறுவனத்தின் நற்பெயருக்குக் களங்கம் ஏற்படுவதைத் தவிர்த்தல்.
6) தொழிலாளர்கள் சுதந்திரமாக தொழிலில் ஈடுபடும் சூழலை ஏற்படுத்திக் கொடுத்தல்.

சமகால வேலையுலகில் எதிர்ப்படும் பாதுகாப்பற்ற தொழில்கள் மற்றும் இடரான சந்தர்ப்பங்கள்

1- மின்தாக்குக்கு ஆளாதல்.

2- பொறிமுறை சாரந்த விபத்துக்கள்

உதாரணம்: உயரமான ஓர் இடத்திலிருந்து விழுதல்
உடலின் மீது பாரமான பொருளொன்று விழுதல்
வழுக்கி விழுதல் போன்றவை.

3- இரசாயனப் பொருள்கள் உடலில் தொடுகையடைவதால் / சேர்வதால் ஏற்படும் விபத்துக்கள்.

4- தவறான மெய்ந்நிலைகளில் இருந்தவாறு வேலைகளில் ஈடுபடுவதால் ஏற்படும் விபத்துக்கள்.

5- பாதகமான சூழல் நிபந்தனைகளுக்கு (ஒலி, வெப்பநிலை, அதிர்வு, கதிரியக்கம்) ஆளாவதால் ஏற்படும் விபத்துக்கள்

M.N.MUHAMMAD SUFIYAN (NDinTech Agri & Sci, BA, PGDE ®)

M.N.MUHAMMAD SUFIYAN -(SLTS)
NDinTech Agri & Sci (VNCoEdu)
B.A (SEU of SL)
PGDE (OUSL) H.P 0776259116

www.lkedu.lk

6- உயரமான இடத்திலிருந்து விழுதல், உடலின் மீது பாரமான பொருள் விழுதல், வழுக்கி விழுதல் போன்ற விபத்துக்கள்.

தொழிலின் போது இவ்வாறான பாதுகாப்பற்ற நிலைமைகள் காரணமாக குறித்த தொழிலில் ஈடுபடுபவர் எதிர்நோக்க நேரிடும் பாதகமான சந்தர்ப்பங்கள்

1- தற்காலிக இயலாமை நீவுநஅிழசயசல னளையடிடைவைநைளரூ
2- உடலின் ஒரு பகுதி - நிரநத்ரமான இயலாமை நீநசஅயநெவெ ியசவயைட னளையடிடைவைநைளரூ
3- முழு உடலும் - நிரநத்ர இயலாமை நீநசஅயநெவெ னளையடிடைவைநைளரூ
4- மரணம் சம்பவித்தல் நீனுநயவா

இவ்வாறாக தொழில் காரணமாக விபத்துக்கு அல்லது நோய் நிலைமைகக் ஆளாவதால் குறித்த ஊழியர், அப்பணியாற்றிய நிறுவனம், நாடு ஆகியவற்றின் மீது ஏற்படும் மறை வகையான (–) தாக்கங்கள்

1- ஊழியர் மீது ஏற்படும் தாக்கங்கள்
உதாரணம்: விபத்துக்குள்ளாதல், மரணித்தல்.
நோய்வாய்ப்படல்
பொருளாதார சமூகப் பிரச்சினைகள் ஏற்படல்.

2- நிறுவனத்துக்கு ஏற்படும் தாக்கங்கள்
உதாரணம்:
i- நிறுவனத்தின் விளைதிறன் குறைவடைதல்.
ii- சட்டரீதியான நடவடிக்கைகளுக்காக பணமும் நேரமும் வீண்விரயமாதல்.
iii- உற்பத்திகளின் தரம் குறைவடைதல்.
iv- ஊழியர்களின் ஆர்வம் குறைவடைவதால் உற்பத்தி குறைவடைதல்.
v- நிறுவனத்தின் நற்பெயருக்குப் பங்கம் விளைதல்.
vi- நேரம் வீணே கழிதலும் பயிற்சிபெற்ற ஊழியர் இழப்பும்.
vii- உபகரணங்கள் சேதமுறுதலால் பழுதுபார்க்கச்செய்ய நேரிடுதல்.

3- நாட்டின் மீது ஏற்படும் தாக்கங்கள்
உதாரணம்:
i- விளைதிறன் குறைவடைதல்.
ii- சமூகப் பிரச்சினைகள் உருவாதல்.

தொழில்சார் பாதுகாப்பும் சுகாதாரமும்

யாதேனும் தொழிலில் ஈடுபடும் ஊழியர்கள் அனைவரதும் உடல், உள, சமூக நல்வாழ்வை உச்சமட்டத்தில் மேம்படுத்தலும் பேணிவருதலும் தொழில்சார் பாதுகாப்பும் சுகாதாரமும் என்பதால் கருதப்படுகின்றது.

OHSAS 18001 : 2007 இனது வரைவிலக்கணத்தின்படி,

"மனிதனுக்கு ஆபத்தான காயம், நோய்நிலைமை அல்லது இவை இரண்டினதும் சேர்மானத்தை ஏறப்டுதத்க்கூடிய ஆற்றலைக்கொண்ட ஒரு மூலம் **(Source)** அல்லது நிலைமை அல்ல்து செயலே இடர் **(Hazard)** எனப்படுகின்றது

M.N.MUHAMMAD SUFIYAN [NDT AgriBSci, BA, PGDE®]

M.N.MUHAMMAD SUFIYAN -(SLTS)
NDinTech Agri & Sci (VNCoEdu)
B.A (SEU of SL)
PGDE (OUSL) H.P 0776259116

www.lkedu.lk

வாழ்க்கைத் தொழில்சார்ந்த இடர்களை இரண்டு வகையாகக் கூட்டமாக்கலாம்

1– **தொழில்சார் விபத்துக்கள்**

வாழ்க்கைத் தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது திடீரென நிகழுகின்ற திட்டமிடப்படாத, எதிர்பாராத தீங்கான நிகழ்வுகளே தொழில்சார் விபத்துக்கள் எனப்படும்.

2- **தொழிசார் நோய்கள்**

தொழில் செய்யும் இடத்தில் பாதகமான இரசாயனப் பொருள்கள், பௌதிக மற்றும் உயிரியல் காரணிகளுக்கு ஆளாவதால் காலப்போக்கில் தோன்றும் நோய்நிலைமைகளே தொழில்சார்ந்த நோய்களாகும்.

தொழிற் காப்பு மற்றும் சுகாதாரம் (Occupational Safety and Health)

அனைத்து வேலை நிலையங்களிலும் அனைத்து தொழில் செயவோரினதும் உச்சளவான பௌதிக, உள, சமுக நலத்தைப் பேணிப் பாதுகாத்து மேம்படுத்துவதே தொழில்சார் சுகாதாரம்

காயத்தை ஏற்படுத்தக்கூடியதோ அல்லது சுகாதார ரீதியான கேட்டினை விளைவிக்கத்தக்கதானதோ அல்லது தொழிற்சூழல் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்தக்கூடியதுமான செயற்பாடு ஆபத்து (Hazzard) எனப்படும்.







வாழ்க்கைத் தொழில்சார் இடர்நிலைமைகக்கு ஏதுவான காரணியை அடிப்படையாகக் கொண்டு, தொழில்சார்ந்த இடர்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1- பௌதிக இடர்கள் **(Physical hazards)**

2- இரசாயன இடர்கள் **(Chemical hazards)**

3- உயிரியல் இடர்கள் **(Biological hazards)**

4- பணித்திறனியல் சாரந்த இடர்கள்**(Ergonomic hazards**

5- உள-சமூக இடர்கள் **(Phychosocial hazards)**

பௌதிக இடர்கள் **(Physical hazards)**

- இடருக்குக் காரணமாக அமைவது யாதேனும் பௌதிகச் செயல் எனின் அல்லது யாதேனும் சக்தி எனின், அது பௌதிக இடர் ஆகும்.
- இவ்வாறான பெரும்பாலான இடர்கள் திட்டமிடாத நிலையில் எதிர்பாராத வகையில் திடீரென நிகழுகின்றமையால் இவை பெரும்பாலும் விபத்துக்கள் போன்ற தன்மையைப் பெறும்.
  1- உடைவு, முறிவு, காயம், எரிவு, மின் தாக்கு.
  2- நீண்டகால ரீதியில் தாக்கம் விளைவிக்கும் காரணங்கள்.

M.N.MUHAMMAD SUFIYAN -(SLTS)
NDinTech Agri & Sci (VNCoEdu)
B.A (SEU of SL)
PGDE (OUSL) H.P 0776259116

www.lkedu.lk


உதாரணம்: **X** - கதிர், ருஏ கதிர், அதிக இரைச்சல் (ஒலி), பொருத்தமற்ற ஒளியேற்ற நிலைமைகள், அதிர்வுகள்


DID YOU KNOW...




பௌதிக ரீதியான ஆபத்துக்கள் (Physical hazards)

- வெட்டு, கிழிப்பு, குத்து காயங்கள் ஏற்படல் X கதிர்கள்
- UV கதிர்கள் உடலில் படல்
- அதிக இரைச்சல்
- வெப்பம், அதிர்ச்சி ஆகியனவற்றுக்கு உட்படல்









www.lkedu.lk

M.N.MUHAMMAD SUFIYAN

இரசாயன இடர்கள் (Chemical hazards)

- இடர் ஏற்படுவதற்குக் காரணமாக அமைவது யாதேனும் இரசாயனப் பதார்த்தம் எனின், அது ஓர் இரசாயன இடர் ஆகும். இரசாயனப் பொருள்களைக் கையாளும்போது அவை, வாய், மூக்கு, தோல் போன்றவற்றின் ஊடாக உடலை அடைய இடமுண்டு.
- அவ்வாறான இரசாயனப் பொருள்களுகக் கணப்பொழுதில் அல்லது நணீட காலத்துக்கு ஆளாவதனாலேயே பெரும்பாலும் இவ்வாறான இடர்நிலை உருவாகுவாகும். அத்தோடு அதன் விளைவாக ஏற்படும் பாதிப்பானது நீண்டகால ரீதியில் செல்வாக்குச் செலுத்தவும் இடமுணடு.

  உதாரணம்:

  1- நசசு வாயுக்கள், பூச்சி கொலலிகள், அமில வகைகள், சேதனப் பொருளக்ள் சில சந்தரப்பங்களில் உடலில் சேருமாயின் சில வேளைகளில் திடீர் மரணம் கூட சம்பவிக்கலாம்.


M.N.MUHAMMAD SUFIYAN -(SLTS)
NDinTech Agri & Sci (VNCoEdu)
B.A (SEU of SL)
PGDE (OUSL) H.P 0776259116

www.lkedu.lk

2- சில அமில வகைகள், ஈயம், அசுபெசுத்தோசு, பென்சீன் போன்ற சேதனப் பொருள்கள் நீண்ட காலத்துக்கு உடலில் சேர்வதால், நாட்பட்ட நோய்கள் ஏற்படலாம். மரணம் கூட சம்பவிக்கலாம்.

DID YOU KNOW...

இரசாயன ரீதியான ஆபத்துக்கள் (Chemical hazards)



- நச்சுவாயு
- பூச்சிநாசினிகள்
- ஈயம்
- அசுப்பெத்தோசு போன்றவற்றை முகருதல்
- அமில வகைகள்
- பென்சீன் போன்றன தோலில் படுதல்





உயிரியல் இடர்கள் (Biological hazards)

- இடருக்குக் காரணமாக அமைவது ஓர் அங்கி (உயிரி) எனின், அவ்வாறான இடர்கள் உயிரியல் இடர்கள் எனப்படும்.

உதாரணம்:

1- நுண்ணங்கிகள் உடலை அடைதல் (இதனபோது நுரையீரல் சார்ந்த நோய்கள், கழிச்சல்நோய், தோலில் தொற்றுக்கள் போன்றவை ஏற்பட இடமுண்டு.)


2- விலங்குகள் கடித்தல் / தீண்டுதல் காரணமாக எலிக்காய்ச்சல், டெங்கு போன்ற நோய்களுக்கு ஆளாக நேரிடலாம்.


DID YOU KNOW...

- நுண்ணங்கிகள் உடலினுட் செல்லுதல்
- விலங்குகள் தீண்டுதல் / கடித்தல்









பணித்திறனியல் சாரந்த இடர்கள்(Ergonomic hazards

- இவ்வகை இடர்கள் உழைப்புசார் இடர்கள் எனப்படும்.

M.N.MUHAMMAD SUFIYAN [NDT Agri&Sci...

M.N.MUHAMMAD SUFIYAN -(SLTS)
NDinTech Agri & Sci (VNCoEdu)
B.A (SEU of SL)
PGDE (OUSL) H.P 0776259116

www.lkedu.lk

- வாழ்கைத் தொழிலில் ஈடுபடும் போது ஊழியரின் என்பு, தசைநார், நரம்புத் தொகுதிகளுக்கு பாதிப்பு ஏற்படாதவாறான மெய்ந்நிலைகளைப் பேணிவருதலும், இயந்திரோபகரணங்கள், சாதனங்களைப் பயன்படுத்தலுமே பணித் திறனியல் எனப்படுகின்றது.
- அவ்வாறல்லாத பெரும்பாலான சந்தர்ப்பங்கள் உழைப்புசார் இடர்களுக்குக் காரணமாக அமையும்.
  உதாரணம்:
  1- தவாறன ஒரு மெய்ந்நிலையில் நீண்ட நேரம் இருக்க நேரிடுதல்,
  2- தவறான மெய்ந்நிலையில் இருந்தவாறு இயந்திரோபகரணங்கள், சாதனங்களைப் பயன்படுத்த நேரிடுதல் போன்றவை காரணமாக ஏற்படும் இடர்கள் இவ்வகையைச் சேர்ந்தவையாகும்.
  3- கழுத்துவலி, இடுப்புவலி, நாள முடிசசு போன்றவை பரவலாகக் காணப்படும் இவ்வகை இடர்களாகும். இவ்வாறான இடர்களின் தாக்கம் நீண்டகால ரீதியானவையாக இருக்க இடமுண்டு.

DID YOU KNOW...

கொண்ணிலை சார்ந்த ஆபத்துக்கள்

- பிழையான கொண்ணிலையைப் பயன்படுத்தல்
- ஒரே கொண்ணிலையில் நீண்டநேரம் இருத்தல்

உள–சமூக இடர்கள் (Phychosocial hazards)


- இது பெரும்பாலும் ஆள்சார்ந்த ஒரு நிலைமையாகும்.
- நலிவான ஆளுமையும் மனநிலையும் கொண்ட நிறுவனத்தலைவர் ஒருவர் காரணமாக அவரின் கீழ் பணியாற்றும் ஊழியர்களுள் இவ்வாறான இடரக்ளை எதிரநோகக் இடமுண்டு.
- மேலும் மிகையான வேலைப்பளு, பணிமுறை மாற்று (றுழசம ளாகைவ), உற்பத்தி இலக்குகள், மேலதிக நேர வேலை, நிறுவனத்தில் நடைமுறையிலுள்ள நெகிழ்ச்சியற்ற சட்டதிட்டங்கள், போட்டா போட்டித்தன்மை போன்ற நிலைமைகள் இதற்குக் காரணமாகலாம்.
- மேலும் இதன் விளைவாக உயர் குருதி அமுக்கம், இதய நோய்கள், நிரிழிவு, கொலத்திரோல், மூலவியாதி, உள நோய்கள் போன்ற நிலைமைகளும் ஏற்பட இடமுண்டு.

DID YOU KNOW...

உளச்சமூகவியல் சார்ந்த ஆபத்துக்கள்

உளத்தகைப்பு, சலிப்பு







M.N.MUHAMMAD SUFIYAN -(SLTS) NDinTech Agri & Sci, BA, PGDE ®

M.N.MUHAMMAD SUFIYAN -(SLTS)
NDinTech Agri & Sci (VNCoEdu)
B.A (SEU of SL)
PGDE (OUSL) H.P 0776259116

www.lkedu.lk

தேர்ச்சி மட்டம் 16.2

இடர் காப்புப் பரிசீலனை நடத்தி தொழில்சார் இடர்களைத் தவிர்க்கத்தக்க விதத்தை விசரணை செய்வார்.

- அவ்வாறான பாதகமான நிலைமைகளைத் தவிர்ப்பதற்காக அல்லது இழிவாக்குவதற்காக, முதலில் செய்ய வேண்டியது அவ்வாறான இடர்கள் ஏற்பட ஏதுவாகக்கூடிய காரணிகளை நேரகாலத்துடன் இனங்கண்டு கொள்ளலாகும்.
- இடர்களை இனங்காண்பதற்காக ஒரு முறை என்ற வகையில் இடர்காப்புப் பரிசீலனை **(Safety audit)** பயன்படுத்தப்படுகின்றது.

இடர்காப்புப் பரிசீலனை நடத்துவதன் படிமுறைகள்

1– **இடர்காப்புப் பரிசலீனை அணியொன்றினை (Safety audit team) நியமித்தல்**

இதற்காக தொழிலாளர் பாதுகாப்பு அதிகாரி ஒருவரும் உள்ளடங்கும் வகையில் வேலை செய்யும் இடத்தில் வெவ்வேறு செற்பாடுகள் தொடர்பான விளக்கத்தைப் பெற்றுள்ள சில ஊழியர்களையும் உள்ளடக்குவதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துக.

2– **செவ்வைபார்ப்புப் பட்டியல்கள் (Check list) தயாரித்தல்.**

மேற்படி அணியின் மூலம் நிறுவனத்தில் பயன்படுத்தும் வெவ்வேறு இயந்திரோபகரணங்கள் தொடர்பாக, அவற்றினை உற்பத்தி செய்த நிறுவனத்தினால் தரப்பட்டுள்ள பாதுகாப்பு அறிவுறுத்தல்களை வலியுறுத்துவதன் மூலமும் நிறுவனத்தில் ஏற்கெனவே நிகழ்ந்த இடர்கள் குறித்துக் கற்றாய்தல் மூலமும் இடர்சார்ந்த சந்தர்ப்பங்களை இனங்கண்டு செவ்வைபார்ப்புப் பட்டியல்கள் (ஊநஉம டளைவ) தயாரித்தல்.

3- இடர்சார்ந்த சந்தர்ப்பங்களை இனங்கண்ட பின்னர், ஏற்படத்தக்க இடர்களைப் பகுப்பாய்வு செய்தல் (Risk analysis) மூலம் இடரின் தாக்கங்களை **அதாவது இழப்பின் அளவை மதிப்பீடு செய்தல் (Risk Hazard Assessment)**

- மேலும் வேலைத்தளத்தில் சூழல் நிபந்தனைகள், இடர் நிலைமைகளுக்கு ஏதுவாகும் சந்தர்ப்பங்களில் அதாவது வளியின் கட்டமைப்பு, இரைச்சல் மட்டம், தூசு மட்டம், வெபப்நிலை மட்டம் போன்ற காரணிகள் செல்வாக்குச் செலுத்தும் போது அதற்காகச் சர்வதேச தரநியமங்களைப் பயன்படுத்தல் வேண்டும்.

அந்த நியமங்கள் பற்றிய அறிக்கைகளைப் பெறுவதற்காக, இலங்கையிலெனின் பின்வருவன மூலம் தேவையான தொழினுட்ப உதவிகளைப் பெற்றுக்கொள்ளலாம்.

1- தொழில் திணைக்கள கைத்தொழில் பாதுகாப்புப் பிரிவு **(Industrial safety Division)** மூலம்

2- அல்லது தேசிய வாழ்க்கைத்தொழிற் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிறுவனம் **(Industrial Safety)**

3- கைத்தொழில் தொழினுடப் நிறுவனம் **(National Institute of Occupational Safety & Health)**

இடர்கள் மற்றும் அவற்றின் பாதகமான நிலைமைகளை இனங்கண்ட பின்னர், அவற்றைத் தவிர்ப்பதற்கான மற்றும் இழிவாக்குவதற்கான முறைகள்


- அதற்காக, நிறுவன முகாமையாளர் தொடக்கம், இடர்காப்புப் பரிசலீனை அணியினரின் கூட்டான இணக்கப்பாட்டுடன் தீர்வுப் பிரேரணைகள் முன்வைக்கப்படும்.
- இதற்காக இடர்க்கட்டுப்பாட்டு அடுகக்வமைப்பின் (ர்நைசயசஉால) உதவியைப் பெறுவது முக்கியமானது.

M.N.MUHAMMAD SUFIYAN [NDT AgriSci, BA, PGDE ®]

M.N.MUHAMMAD SUFIYAN -(SLTS)
NDinTech Agri & Sci (VNCoEdu)
B.A (SEU of SL)
PGDE (OUSL) H.P 0776259116

www.lkedu.lk

இடர் கட்டுப்பாட்டு (இடர் தவிர்ப்பு) அடுகக்வமைப்பு



இடர் தவிர்ப்பு அடுக்கவமைப்பு

- அடுக்கவமைப்பின்படி, இடர் தவிர்பப் வினைத்திறனானது, மேலிருந்து கீழ்நோக்கிச் செல்லும் போது குறைவடைந்து செல்லும்.
- எனவே இடர் தவிர்ப்பதற்காக முற்பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கும் போது, இது தெடார்பாக கவனஞ் செலுத்துவது அவசியமாகும்.

இடரை நீக்குதல் (Elimination)

- இடர்க்காரணியை முற்றாக நீக்குதல் அல்லது இடரான இடத்திலிருந்து ஊழியரை முற்றாக நகீகுதலே இங்கு செய்யப்படுவதாகும்.
- எவரேனும் ஊழியர் உயரமான ஓர் இடத்தில் இருந்தவாறு செய்யும் ஒரு வாழ்க்கைத் தொழிலை தாழ்வான ஓரிடத்தில் இருந்தவாறு செய்வதற்குத் தேவையான வசதிகளைச் செய்து கொடுப்பதால் ஊழியர் உயரத்தில் இருந்து கீழே விழுதல் எனும் பௌதிக இடர் நிகழக்கூடிய சாத்தியப்பாட்டை முற்றாக நகீகிவிடலாம்.
- பழுதடைநத், உடைநத், சேதமுறற் மின் உபகரணங்கள், மின் செருகிகள் போன்றவற்றைப் பழுதுபார்த்தல் மற்றும் நீக்குதல் மூலம் மின் தாக்கு காரணமாக பௌதிக இடர் ஏற்படக் கூடிய சாத்தியப்பாட்டை முற்றாக நீககிவிடலாம்.
- அதி அபாய இரசாயனப் பொருள்கள், அதிக நச்சுத்தன்மையுள்ள பீடை கொல்லிகள் போன்றவற்றைப் பயன்பாட்டிலிருந்து நீக்குவதன் மூலம் அவை காரணமாக ஏற்படத்தக்க இரசாயன இடர்களை முற்றாக நீக்கலாம்.
- நுளம்புகள் பெருகும் இடங்களை இல்லாதொழிப்பதன் மூலம் நுளம்புக்கடி காரணமாக ஏற்படக்கூடிய உயிரியல் இடர்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.
- பாரந்தூக்குவதற்காக "ே.ாக்லி.்ப்ட்" **(forklift)** போன்ற தொழினுட்ப உத்திகளைப் பயன்படுத்துவதன் மூலம் தொழில்சார்நத் இடர்களைத் தவிர்த்துக் கொள்ளலாம்.





M.N.MUHAMMAD SUFIYAN [NDT Agri&Sci, BA, PGDE ®]

M.N.MUHAMMAD SUFIYAN -(SLTS)
NDinTech Agri & Sci (VNCoEdu)
B.A (SEU of SL)
PGDE (OUSL) H.P 0776259116

www.lkedu.lk

மாற்றீட்டு / பிரதியீட்டு வழிகளைக் கையாளல் (Substitution)

- தொழிலின்போது யாதேனும் இடர் ஏற்படத்தக்க செயன்முறையொன்று உள்ளதாயின் அசெயன் முறைக்குப் பங்கம் விளையாதவாறு நடைமுறையில் உள்ள முறையை மாற்றுதல் அல்லது ஆபத்தான பொருள்களை மாற்றுவதன் மூலம் இடரைக் குறைத்துக் கொள்ளலாம்.

  உதாரணம்:

  1- வெடிபொருள்களைப் பயன்படுத்திச் சுரங்கவழி குடைவதற்குப் பதிலாக சுரங்கவழி குடையும் உபகரணங்களைப் பயன்படுத்துவதன் மூலம் **பௌதிக இடர்களைக்** குறைத்தல்.

  2- விவசாயக் கைத்தொழிலில் இரசாயனப் பீடைகொல்லிகளுக்குப் பதிலாக சேதனப் பீடைகொல்லிகள் பயன்படுத்துவதால் **இரசாயன இடர்களைக்** குறைத்தல்.

  3- கழிவுப் பொருள்களை அப்புறப்படுத்துவதற்காக நவீன உபகரணங்களைப் பயன்படுத்து வதன் மூலம் **உயிரிய இடர்களைக்** குறைத்தல்.

எந்திரவியல் கட்டுப்பாட்டு முறைகளைக் கையாளல் (Engineering control)

- வேலைத்தளங்கள், பொறிகள் மற்றும் செயன்முறைகளை இடர் இழிவாகுமாறு உருவாக்குவதே இதன் மூலம் கருதப்படுகின்றது.

  உதாரணம்:

  1- வெப்பம், கதிர்கள், அதிர்வுகள் காரணமாக இடர்கள் ஏற்படத்தக்க இடங்களின் செயற்பாட்டைக் கட்டப்படுத்துவதற்காக தொலைக்கட்டுப்படுத்தி **(Romote Control)** பயன்படுத்துதல்.

  2- நுண்ணங்கிகள் காரணமாக இடர்கள் ஏற்படத்தக்க சந்தர்ப்பங்களில், வேலைத்தளத்தை உலர்வாகவும் நுண்ணங்கிகளற்ற நிலையிலும் வைத்திருப்பதற்காக புறத்தே மின் விசிறிகள் பொருத்துதலும் நன்கு காற்றோட்டம் கிடைப்பதற்கு தேவையான வசதிகளைச் செய்தலும்.


  3- இரசாயனப் பொருட் களஞ்சியசாலைகளில் வெளிப்படுத்து விசிறிகள் **(Exhaust fans)** பொருத்துதல்.


  4- சரியான மெய்நிலைகளைப் பேணுவதற்கு ஏற்றவாறாக மேசை, கதிரை போன்ற தளபாடங்களை உருவாக்குதல்.



பணித்திறனியல் (Ergonomy)

தொழிலில் ஈடுபடுவோரின் என்பு மற்றும் தசைத் தொகுதிகளுக்கு பௌதிகப் பாதிப்புக்கள் ஏற்படாதவாறான கொண்ணிலையைப் பேணுதல் மற்றும் இயந்திரங்கள், கருவிகள் ஆகியவற்றைப் பயன்படுத்தல் பணித்திறனியல் எனப்படும்.







M.N.MUHAMMAD SUFIYAN (NDT Agri&Sci, BA, PGDE ®)

M.N.MUHAMMAD SUFIYAN -(SLTS)
NDinTech Agri & Sci (VNCoEdu)
B.A (SEU of SL)
PGDE (OUSL) H.P 0776259116

www.lkedu.lk







உதாரணம்: கணினிப் பயன்பாட்டின்போது பேணப்பட வேண்டிய சரியான கொண்ணிலை


5- ஆழமான கிணற்றிலிருந்து நீரை உயர்த்துவதற்காக, கைகளால் சாம்புவதற்குப் பதிலாக மோட்டரொன்றினைப் பயன்படுத்துதல்.

DID YOU KNOW...

காப்பு ஆய்வு (Safety auditing)

ஆபத்தான நிலைமைகளை இனங்காணும் முறையாகும்.







காப்பு ஆய்வை மேற்கொள்ளும் பின்வரும் படிமுறைகள்

காப்பு ஆய்வுக் குழுக்களைத் தெரிவுசெய்தல்

1) நிறுவனத்தினுள் பல்வேறு ஆபத்துக்கள் ஏற்படக்கூடிய தொழில் நடவடிக்கைகளில் ஈடுபடும் நபர்கள் உள்ளடங்கலாக தொழிலாளர் காப்பு உதத்தியோகத்தர் **(Safety officer)** அடங்கலாக குழுவைத் தெரிவுசெய்க

'UHAMMAD SUFIY

M.N.MUHAMMAD SUFIYAN -(SLTS)
NDinTech Agri & Sci (VNCoEdu)
B.A (SEU of SL)
PGDE (OUSL) H.P 0776259116

www.lkedu.lk

2) இயந்திரங்கள் தொடர்பாக அவற்றின் உற்பத்தி நிறுவனங்களால் வழங்கப்பட்டள்ள பாதுகாப்பு அறிவுறுத்தல்களை கருத்திற்கொண்டும் ஊழியர்களது கருத்துக்களையும் கேட்டறிந்தும் பாதுகாப்புச் செவ்வைபார்த்தற் பட்டியலைத் **(Check list)** தயாரித்தல்.
3) இனங்காணப்பட்ட ஆபத்தான சந்தர்ப்பங்களுக்குக் கூட்டாகத் தீர்வுகளைச் சமர்ப்பித்தல்.

ஆபத்து மதிப்பீடு (Hazard evaluation)


மதிப்பீட்டை மேற்கொள்ளவேண்டிய ஆபத்து நிலைமைகள்


1) வேலைத்தலத்தின் பல்வேறு இடங்களிலுள்ள வளியின் தன்மை - CO_2, CO, NO, NO_2
2) இரைச்சல் மட்டம்
3) தூசு மட்டம்
4) வெப்பநிலை மட்டம்

ஆபத்து மதிப்பீட்டை (Hazard evaluation) மேற்கொள்ளும் விதம்

1- ஆபத்து நிலைமைகளை இனங்காணல்.
2- மதிப்பீடு செய்தல்
இதன்போது மதிப்பீட்டை மேற்கொள்ளவேண்டிய ஆபத்து நிலைமைகளாகப் பின்வரும் சூழல் நிலைமைகளை குறிப்பிடலாம்.

- வேலைத்தலத்தின் பல்வேறு இடங்களிலுள்ள வளியின் தன்மை - CO_2, CO, NO, NO_2
- இரைச்சல் மட்டம்
- தூசு மட்டம்
- வெப்பநிலை மட்டம்





இதற்கான தொழினுட்ப வழிகாட்டல்களைப் பின்வரும் இடங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

1- இலங்கையில் தேசிய தொழில்சார் சுகாதாரப் பாதுகாப்பு நிறுவகம்
2- கைத்தொழில் தொழினுட்ப நிறுவகம் (ITI – I Technology Institution)

◎ சர்வதேச தரங்களுக்கு அமைவாக இது மதிப்பிடப்படும்.
உதா:-
தொழில் நிலையத்தின் இரைச்சல் தொடர்பாக அனுமதிக்கப்பட்ட தரம் 85 டெசிபலின் கீழ் 8 மணிநேரம் உச்ச சேவை நேரம்.

◎ இரைச்சல் 85 டெசிபலை விட அதிகமாயின் சேவை நேரம் 8 மணித்தியாலத்தை விட குறைவாக அமைய வேண்டும்.


◎ சேவை நேரம் அதிகரிக்குமெனின் இரைச்சலின் அளவு குறைக்கப்பட வேண்டும்.

M.N.MUHAMMAD SUFIYAN [NDinTech Agri&Sci, BA, PGDE ®]

M.N.MUHAMMAD SUFIYAN -(SLTS)
NDinTech Agri & Sci (VNCoEdu)
B.A (SEU of SL)
PGDE (OUSL) H.P 0776259116

www.lkedu.lk

ஆபத்துக்களைத் தவிர்ப்பதற்கான (Hazard control) அடுக்குவழித்தொடரின் செயற்பாடு



↑
பலன்தருதன்மை



ஆபத்துக்களைத் தவிர்க்கும் அடுக்குவழித்தொடர்
(Hierachy of hazard control)

அடுக்குவழித்தொடரின் ஒவ்வொரு படியும்

(1) அகற்றுதல் (Elimination)

இதன்போது ஆபத்தான சந்தர்ப்பங்கள் பௌதிக ரீதியாக முழுமையாக அகற்றப்படும். உதாரணம்: உயரமான இடத்தலிருந்து பணிபுரியும் தொழிலை உயரம் குறைவான இடத்தில் மேற்கொள்ள வசதிகளை வழங்குதல்.







(2) பிரதியீட்டுப் பயன்பாடு (Substitution)

- அதிக ஆபத்து உள்ளதொன்றுக்குப் பதிலாக செயன்முறைக்குத் தடங்கலின்றி ஆபத்து குறைவானதொன்றைப் பயன்படுத்தல்.
  உதா:
- இரசாயனப் பதார்த்தமாக ஆபத்தான பென்சீனுக்குப் பதிலாகக் கைத்தொழில் தொலுயீன், ஐசோபிறின் போன்ற சேர்வைகளைப் பயன்படுத்தல்
- விவசாயத்தில் இரசாயனப் பீடைநாசினிகளுக்குப் பதிலாக சேதனப் பீடைநாசினிகள் பயன்படுத்தப்படல்.
- இயந்திரங்கள் மற்றும் தொழினுட்ப முறைகள் மூலம் (Engineering control) உபகரணங்களைப் பயன்படுத்துவதன் மூலம் ஆபத்து மற்றும் தொழிலாளர் தொலைக் கட்டுப்படுத்தியைப் பயன்படுத்தல், Laminar flow பயன்படுத்தல்.



(3) நிர்வாக முறையியல் மூலமாக (Administration control)

உதாரணம்:

i) அபாயம் என்பதற்குரிய அறிவித்தல் பலகையைத் தொங்கவிடல்.

ii) ஆபத்து குறைவான நேரங்களைப் பயன்படுத்தல் (வீதி செப்பனிடுவதற்கென போக்குவரத்து குறைவான சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தல்)

iii) சுழற்சிமுறையிலான வேலை ஒழுங்கை (Work rotation) வழங்குவதன்மூலம் சலிப்பைப் போக்குதல்.

iv) தொழில்சார் திறன்களை வளர்த்தல் (Skill development)

v) பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்தல் - ஆபத்தான நிலைமைகளின்போது செயற்படுவதற்கெனப் பல்வேறு குழுக்களுக்கு பயிற்சியளித்து பொறுப்புக்களை ஒப்படைத்தல். உதாரணம்- முதலுதவிக் குழுக்கள், தீயணைப்புக் குழுக்கள்.

M.N.MUHAMMAD SUFIYAN [NDT ... BA, PGD...]

M.N.MUHAMMAD SUFIYAN -(SLTS)
NDinTech Agri & Sci (VNCoEdu)
B.A (SEU of SL)
PGDE (OUSL) H.P 0776259116

www.lkedu.lk







தனியாள் பாதுகாப்பு அங்கிகளைப் (Personal protection equipment) பயன்படுத்தல்

- ஆபதத்தான நிலைமைகளையும், ஆபத்தான நிலைமைகளின் வகைகளையும் இனங்கண்ட பின்னர் அவற்றிலிருந்து பாதுகாப்பை பெறுவதற்கு பாதுகாப்பு அங்கிகளைப் பயன்படுத்த வேண்டும்.
- அவற்றைச் சரியாகப் பயன்படுத்த வேண்டும்.







நிருவாகம் சார்ந்த கட்டுப்பாட்டுக் கருமங்கள் (Administrative control)

- இடர் இழிவாகும் வகையில் வளங்கள், உபகரணங்கள், ஆளணிமுகாமை, பணிமுறை மாற்று **(Work shift)** ஆகியவற்றை அமைத்தல் இதில் அடங்கும்.

  உதாரணம்:

  1- இடர்மிக்க இடங்களில் பாதுகாப்புச் சமிக்ஞைப் பலகைகள் / அறிவுறுத்தல் பலகைகள் பொருத்துதல்.

  2- இரசாயனப் பொருள்கள் பயன்படுத்தும் இடங்கில் அவற்றைச் சரியாகவும் பாதுகாப்பாகவும் பெயரிட்டுக் களஞ்சியப்படுத்தல்.

  3- பயன்படுத்துவது தொடர்பான சரியான அறிவுறுத்தல் பத்திரங்களைத் தயாரித்துக் காட்சிப்படுத்துதலும், ஆபத்தானது எனும் அறிவித்தலைக் காட்சிப்படுத்தவதும்.

  4- பாதகமானமாறு பணிமுறை மாற்றம் **(Work shift)** செய்தல்.

  5- உயிரியல் தொற்று நிலைமைகள் தொடர்பாக ஊழியர்களுக்கு அறிவூட்டம் செய்தல்.

  6- ஊழியர் இடர்களைத் தவிர்ப்பதற்காக இடையிட்ட ஓய்வு நேரங்கள் வழங்குதல்.

  7- இடரான சந்தர்ப்பங்களை எதிர்கொள்வதற்காக ஊழியர்களை ஆயத்தப்படுத்துதலும் பயிற்றுதலும் அவர்களுக்குப் பொறுப்புக்களைப் பகிர்ந்தளித்தலும் (முதலுதவிக்குழு, தீயணைப்புக் குழு, ... போன்ற)

M.N.MUHAMMAD SUFIYAN [B.A, PGDE ®]

M.N.MUHAMMAD SUFIYAN -(SLTS)
NDinTech Agri & Sci (VNCoEdu)
B.A (SEU of SL)
PGDE (OUSL) H.P 0776259116

www.lkedu.lk

DID YOU KNOW...

முதலுதவி

தொழில்சார் ஆபத்துக்கள் ஏற்படின் நோயாளியைத் தகைமை பெற்ற வைத்தியர் ஒருவரிடம் கொண்டு செல்லும்வரை ஆபத்தின் விளைவுகளை மேலும் உக்கிரமடையாது பாதுகாக்க முதலுதவி அளிக்கப்பட வேண்டும்.

1) முதலுதவிப் பெட்டியில் இருக்கவேண்டிய பதார்த்தங்கள்.
2) மயக்கமேற்பட்டவருக்கான முதலுதவி
3) நீரில் மூழ்கியவருக்கான முதலுதவி
4) புய முறிவு ஏற்பட்ட சந்தர்ப்பத்தின்போதான முதலுதவி
5) வெட்டுக்காயத்திலிருந்து அதிக குருதிப்பெருக்கு ஏற்படும் போதான முதலுதவி
6) பாம்புக்கடியின் போதான முதலுதவி
7) கண்ணில் பிறபொருள் விழும்போதான முதலுதவி
8) தொண்டையில் பிறபொருள் சிக்கிய போதான முதலுதவி
9) உணவுக்கால்வாயினூடாக நஞ்சு உட்செல்லும் சந்தர்ப்பத்திலான முதலுதவி

தனியாள் பாதுகாப்பு உபகரணங்கள் பயன்படுத்துதல் (Personal Protective Equipment/ PPE)

- பௌதிக, இரசாயன, உயிரிய இடர்ச் சந்தர்ப்பங்களுக்கு ஆளாவதை இழிவாக்குவதற்காக ஊழியரின் உடல் அல்லது உடலின் ஒருபகுதி மறைக்கப்படுமாறு ஆக்கப்பட்ட உபகரணங்களை அல்லது அணி பொருள்களைப் பயன்படுத்துவதன் மூலம் இடரைக் குறைத்துக் கொள்வதே இங்கு செய்யப்படுவதாகும்.
- மேலும் உடலை மறைப்பதற்கு மேலதிகமாக செய்யும் வேலையை இலகுபடுத்திக் கொள்வதற்குத் தேவையான உபகரணங்களைப் பற்றி வைத்திருப்பதன் மூலம் இடர்களைக் குறைத்துக் கொள்ளத்தக்கவாறாக அணியும் அணிபொருள்களும் இவ்வகையில் அடங்கும்.





உடல் அல்லது உடலின் ஒரு பகுதி மறையும் வகையில் அணியும் தனியாள் பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் வேலையை இலகுபடுத்தும் கருவித் தொகுதியுடன் கூடிய உடை.

M.N.MUHAMMAD SUFIYAN [NDT Agri&Sci, BA, PGDE ®]

M.N.MUHAMMAD SUFIYAN -(SLTS)
NDinTech Agri & Sci (VNCoEdu)
B.A (SEU of SL)
PGDE (OUSL) H.P 0776259116

www.lkedu.lk

தேர்ச்சி மட்டம் 16.3

தொழிசார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம ˙தொடர்பான தரங்களையும் ஒழுங்குவிதிகளையும் விசாரணை செய்வார்.

எந்தவொரு நாட்டிலும் பிரசையொருவர் தமது பாதுகாப்பும் சுகாதாரமும் உறுதிப்படுத்தப்படும் வகையிலும், ஏனையோருக்கு இடைஞ்சல்கள் ஏற்படாத வகையிலும் தாம் விரும்பும் யாதேனும் தொழிலில் ஈடுபட உரிமையுண்டு

- தொழில்சார் பாதுகாப்பையும் சுகாதாரத்தையும் சீராகப் பேணுவது தொடர்பாக இலங்கையில் நடைமுறையில் உள்ள இரண்டு கட்டளைச் சட்டங்களும்.
  1- 1942 இன் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டம்
  2- 1934 இன் 19 ஆம் இலக்க தொழிலாளர் நட்ட ஈட்டுக் கட்டளைச் சட்டம்

தொழிற்சாலைகள் கட்டளைச்சட்டம்

- இலங்கையில் தொழிற்சாலைகளில் சேவையாற்றும் ஊழியர்களுக்கு உடல், உள ரீதியில் நிகழத்தக்க விபத்துக்களிலிருந்து ஊழியர்களைப் பாதுகாத்தலே இச்சட்டத்தின் பிரதான நோக்கமாகும்.
- இச்சட்டத்தில் பின்வரும் பிரதான விடயங்கள் உள்ளடகக்ப்பட்டுள்ளன.
  1- தொழிற்சாலையொன்றினை ஆரம்பிக்கும்போது பின்பற்ற வேண்டிய வழிமுறைக்ள
  2- கட்டடத்துக்கு அனுமதி பெறல் - குறித்த பிரதேச, மாவட்ட தொழிற்சாலைகள் பரிசோதக எந்திரியர் ரூனுளைவசஉைவ குயஉவழசல ஐளிநஉவபை நுபெநெநசரூ அல்லது பிரதான தொழிற்சாலைப் பரிசோதக எந்திரியர் (ஊாநைக குயஉவழசல ஐளிநஉவபை நுபெநெநச).˙. தொழில் ஆணையளர் ரூஊழஅஅளைளழைநெச ழக டயடிழரச ரூ இற்குச் சமர்ப்பித்து அனுமதி பெறுதல் வேண்டும். ஊழியர்களின் பாதுகாபப்பயும் சுகாதாரத்தையும் பேணி வரத்தக்க வகையில் கட்டடம் திட்டமிடப்படுதல் அவசியமாகும்.
  3- தொழிற்சாலையொன்றினை ஆரம்பித்த பின்னர், சேவை தருநர் அங்கு பேணிவர வேண்டிய நிபநத்னைகள்
  4- தொழிற்சாலையைச் சுத்திகரிக்கும் முறைகள்
  5- தொழிற்சாலையில் பேணிவர வேண்டிய நிபந்தனைகள்
  6- நலனோம்பல் வசதிகள்
  7- அசையும் பகுதிகளைப் (தண்டுகள், பற்சில்லுகள், கப்பிகள், நாடாக்கள்) பேணுதல், பராமரித்தல், மறைப்பிட்டு வைத்தல் ஆகிய தொடர்பாகச் செயற்பட வேண்டிய விதம்.
  8- எதிர்பாராத தீப்பற்றல், மின் தாக்கு போன்ற சந்தர்ப்பங்களில் செயற்பட வேண்டிய விதமும் முற்பாதுகாப்பு உத்திகளும்.
  9- வேலை செய்யும் இடத்துக்குப் பாதுகாப்பாக சென்றடையும் வசதியும் இடத்தின் பாதுகாப்பு தொடர்பான உத்திகளும்
  10- தொழிற்சாலையில் யாதேனும் விபத்து தொடர்பாக மாவட்ட தொழிற்சாலைகள் பரிசோதக எந்திரியருக்கு அறிவித்தலும், தொழிற்சாலையில் அவரது அதிகாரங்களும்.

- தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டமானது, தொழில் திணைக்களத்தினது **(Labour department)** கைத்தொழிற் பாதுகாப்புப் பிரிவினாலேயே **(Industrial safety division)** நடைமுறைப்படுத்தப்படும்.
- இதன் மூலம் பிரதேச மட்டத்தில் மாவட்ட தொழிற்சாலைகள் பிரசோதக எதிரியர் அலுவலகங்கள் தாபிக்கப்பட்டுள்ளதோடு, அந்த அலுவலகங்கள் மூலம் குறித்த பிரதேசத் தொழிற்சாலைகளில் ஊழியர்களது பாதுகாப்பு சுகாதாரம், நலனோம்பல் தொடர்பாக இக்கட்டளைச் சட்டத்தின் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும்.

M.N.MUHAMMAD SUFIYAN (NDT Agri&Sci, BA, PGDE ®)

M.N.MUHAMMAD SUFIYAN -(SLTS)
NDinTech Agri & Sci (VNCoEdu)
B.A (SEU of SL)
PGDE (OUSL) H.P 0776259116

www.lkedu.lk

தொழிலாளர் நட்டஈட்டுக் கட்டளைச்சட்டம்

- யாதேனும் தொழிலில் ஈடுபட்டிருக்கும் வேளையில் நிகழ்ந்த ஒரு விபத்து தொடர்பாக அல்லது ஓரளவு காலம் ஒரு தொழிலில் ஈடுபட்டமையால் ஏற்பட்ட நோய் தொடர்பாக யாதேனும் குறித்த நட்டஈட்டைச் செலுத்துமாறு சேவை தருநரிடம் பொறுப்புச்சாட்டுவதே இக்கட்டளைச் சட்டத்தின் பிரதான குறிக்கோள் ஆகும்.

- **கட்டளைச் சட்டத்தில் அடங்கியுள்ள விடயங்கள்:**

1– நட்டஈட்டுக்கு உரித்துடையோர்

- இலங்கை இராணுவ சேவை, இலங்கைப் பொலிசு சேவை ஆகியவற்றில் ஈடுபட்டிருபபோர் தவிர்ந்த ஏனைய சகல ஊழியர்களுக்கும் இச்சட்டத்தின் மூலம் நட்டஈடு பெற உரிமை உண்டு.
- ஊழியர் மரணித்துள்ள ஒரு சந்தர்ப்பத்தில் (தொழில் சார்ந்த விபத்தினால் அல்லது தொழில் காரணமாக ஏற்பட்ட நோயினால்) விபத்துக்கு உள்ளாகியவரில் தங்கி வாழ்வோருக்கு மாத்திரமே நட்டஈடு உரித்தாகும்.

2– நட்டஈடு வழங்குவதற்கு சேவைதருநர்கண்டுண்டிராத சந்தர்ப்பங்கள்

- விபத்து நிகழும் வேளையில் விபத்துக்கு உள்ளாகியவர் குடிபோதையில் இருத்தல்.
- தமது வழங்கப்பட்டுளள் பாதுகாப்பு உபகரணங்கள், அணிபொருள்களை வேண்டுமென்றே அணியாதிருத்தல்.

3– நட்ட ஈட்டைப் பெறும் முறை

- தொழில்சார்ந்த விபத்து அல்லது நோய் என்பதை உறுதிப்படுத்துவதற்காக, வைத்திய கட்டளைச் சட்டத்திக் கீழ், பதிவு செய்யப்பட்ட வைத்தியர் ஒருவரிடம் பெற்ற வைத்தியச் சான்றிதழை முன்வைத்தல்.
- தொழில் சார்ந்த விபத்து / நோய் குறித்து சேவை தருநருக்கு அறிவூட்டம் செய்தல்.
- சேவை தருநர், நட்ட ஈடு செலுத்த மறுக்கும் பட்சத்தில் அல்லது நட்டஈடு தொடர்பாக பெறுநர் திருப்தியடையாத பட்சத்தில் தொழிலாளர் நட்டஈட்டு ஆணையாளருக்கு முறைப்பாடொன்றை முன்வைத்தல்.

ஆபத்துக்களை தவிர்ப்பதற்கு இலங்கையில் நடைமுறையிலுள்ள சட்டங்களின் தன்மை.

ஊழியரின் பாதுகாப்பு, சுகாதாரப் பாதுகாப்பு ஆகியவற்றுக்கென இரண்டு கட்டளைச் சட்டங்கள் உள்ளன

1] 1942 இன் 45 ஆம் இலக்க தொழிற்சாலைகள் கட்டளைச் சட்டம்

சட்டத்தின் பிரதான நோக்கம்

இலங்கையிலுள்ள தொழிற்சாலைகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு உடல்ரீதியாக / சுகாதார ரீதியாக ஏற்படக்கூடிய ஆபத்துக்களிலிருந்து பாதுகாத்தல்

சடத்திலுள்ள பிரதான விடயங்கள்

- ➲ ஊழியரொருவர் தன்னுடையதும் தன்னுடன் சேவையாற்றும் பிற ஊழியர்களதும் பாதுகாப்பையும் சுகாதாரத்தையும் பேணும் முறை.
- ➲ இயந்திரங்களைச் செயற்படுத்தும்போதும் பயன்படுத்தும்போதும் தொழில்தருநரினால் ஊழியர்களின் பாதுகாப்பு பேணப்பட வேண்டிய விதம்
- ➲ கட்டடங்கள் தொடர்பாகத் தொழில்தருநர் நடந்துகொள்ள வேண்டிய விதம்
- ➲ அசையும் பாகங்கள் கொண்ட இயந்திரங்கள் தொடர்பாக தொழில் தருநர் நடந்து கொள்ள வேண்டிய விதம்

M.N.MUHAMMAD SUFIYAN [NDT Agri&Sci, BA, PGDE, ®]

M.N.MUHAMMAD SUFIYAN -(SLTS)
NDinTech Agri & Sci (VNCoEdu)
B.A (SEU of SL)
PGDE (OUSL) H.P 0776259116

www.lkedu.lk

2] 1934 இன் 19 ஆம் இலக்க தொழிலாளர் இழப்பீட்டுக் கட்டளைச் சட்டம் [தொழிலாளர் நட்டஈட்டுக் கட்டளைச் சட்டம்]

சட்டத்தின் பிரதான நோக்கம்

ஏதேனுமொரு தொழிலில் ஈடுபட்டிருக்கும்போது ஏற்பட்ட ஆபத்து தொடர்பாக அல்லது நீண்டகாலமாக வேலையில் ஈடுபட்டதன் காரணமாக ஏற்பட்ட ஆபத்து விளைவிக்கவல்ல நோய் தொடர்பாக குறிப்பிட்டளவு நட்டஈட்டினை தொழில் தருநர் வழங்குவதை உறுதிப்படுத்துவது

சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள்.

i) **நட்டஈடு வழங்கும் கடப்பாடு இல்லாத சந்தர்ப்பங்கள்**

- ஆபத்து நடைபெற்றபோது ஊழியர் மதுபோதையில் காணப்படல்
- தொழில்தருநரின் பணிப்புகளுக்கு மாறாகச் செயற்படல்
- பாதுகாப்பு நடைமுறைகளுக்கு மாறாகச் செயற்படல்

ii) **நட்டஈடு பெறுவதற்கு ஊழியர்களுக்கு உரித்துடைய சந்தர்ப்பங்கள்**

- தொழில் காரணமாக ஏற்பட்டது (தொழில்சார் நோய்) என உறுதிப்படுத்தக் கூடிய நோய் ஏற்பட்டிருத்தல்

iii) **நட்ட ஈட்டைப் பெறும்முறை**

- தொழில்சார் ஆபத்து அல்லது நோய் என வைத்தியரின் சான்றிதழைப் பெறுதல்.
- ஆபத்துத் தொடர்பாக தொழில் தருநருக்கு அறிவித்தல்
- தொழில் தருநர் நட்டஈட்டை வழங்க மறுக்கும் சந்தர்ப்பத்தில் ஊழியர்கள் நட்டஈட்டு ஆணையாளருக்கு அறிவித்தல்

தொழில்சார் பாதுகாப்பு மற்றும் சுகாதாரம் தொடர்பான, நியமங்களை அறிமுகஞ் செய்து, அவற்றின் முக்கியத்துவத்தையும் அவசியத்தையும் விளக்குதல்

www.lkedu.lk

1- ISO 9000

- பண்டங்கள், சேவைகளின் தரம் தொடர்பான தரச் சான்றிதழ் ஆகும்.
- உற்பத்திச் செயன்முறையைச் சீரான முகாமையுடன் பேணிவருவதால் உற்பத்திச் செயன்முறை தொடர்பான விபத்துக்கள் இழிவாகும்.

2- ISO 14000

- இது வேலை செய்யும் இடத்தின் சூழல் நிபந்தனைகள் தொடர்பான ஒரு தரச் சான்றாகும்.
- சேவை இடத்தின் சூழல் நிபந்தனைகளை நன்கு பேணி வருவதன் மூலம் ஊழியர்களது சுகாதார நிலைமை உயர்வதோடு, தொழில் சாரந்த நோய்களுக்கு ஆளாகும் சாத்தியப்பாடு குறைக்கப்படும்.

3- OHSAS 18001 –

- வேலை செய்யும் இடத்தில் தொழில்சார்ந்த பாதுகாப்பையும் சுகாதாரத்தையும் மேம்படுத்தும், முகாமைச் செயன்முறையுடன் நேரடியாக இணைந்த ஒரு தரச் சான்றுப்படுத்தலாகும். இங்கு நிறுவனங்களில் ஊழியர் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலைமைகள் தொடர்பாக குறிதத் துறைகக் அமைய வகுக்கப்பட்ட, சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நியமங்களைப் பயன்படுத்தி அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனமொன்றினால் கணக்காய்வு (யுரனவை) நடத்தி இந்த தரச்சான்றுப்படுத்தல் வழங்கப்படும்.

M.N.MUHAMMAD SUFIYAN [NDT Agri&Sci, BA, PGDE ®]

M.N.MUHAMMAD SUFIYAN -(SLTS)
NDinTech Agri & Sci (VNCoEdu)
B.A (SEU of SL)
PGDE (OUSL) H.P 0776259116

www.lkedu.lk

- **தரச்சான்றுப்படுத்தல் பெறுவதன் முக்கியத்தவம்**

1- தரச்சான்றுப்படுத்தல் மூலம் குறித்த நிறுவனம் சருவதேச ரீதியில் கணிப்புக்கு உள்ளாதல்.

2- அதன் மூலம் பண்டங்கள், சேவைகளுக்காக அந்நிறுவனங்கள் தொடர்பான கேள்வி உயரும்.

3- சந்தையில் உயரிய வருமானம் பெறுவதற்கு இது ஏதுவாகும்.

தொழில்சார்ந்த சுகாதாரம் தொடர்பாக சருவதேச தொழில் தாபனத்தின் (International Labour Organization – ILO) பொறுப்புக்கள் மற்றும் நியமங்கள்

- **(International Labour ganization – ILO) பொறுப்புக்கள் மற்றும் நியமங்கள்**

  - அந்தந்த நாட்டில் தொழிலாளரின் சேவை நிபந்தனைகளையும் உரிமைகளையும் மேமப்டுத்துவதற்காக பல நாடுகள் சேர்நது அமைத்துக்கொண்ட ஓர் ஒழுங்கமைந்த அமைப்பே, "சருவதேச தொழில் தாபனம்" எனப்படுகின்றது.
  - இத்தாபனம் மூலம் வெவ்வேறு தொழில்களின் நிலைமையை உயரிய மட்டத்தில் பேணி வருதல் மற்றும் ஊழியர்களின் தொழில்சார் பாதுகாப்பையும் சுகாதாரத்தையும் பேணிவருதல் தொடர்பாகவும் கவனஞ் செலுத்தி, வெவ்வேறு தர நியமங்கள் அறிமுகஞ் செய்யப்படுவதோடு, அதற்காக வெவ்வேறு உதவிகளையும் வழங்கும்.
  - அங்கு அங்கத்துவ நாடுகள் அவ்வாறான இணக்கப்பாடுகளுக்கு தமது இணக்கத்தை தெரிவிக்கும். (இலங்கையும் சருவதேச தொழிலாளர் அமைப்பின் ஓர் உறுப்பு நாடாகும்.)
  - யாதேனும் நாடு சருவதேச தொழிலாளர் தாபனத்தின் உறுப்புரிமையைப் பெற்றிருத்தலானது, அந்நாட்டில் ஊழியர் பாதுகாப்பும் சுகாதாரமும் பேணிவரப்படுகின்றமைக்கான நம்பகமான ஒரு சான்றுப்படுத்தலாக அமையும்.
  - குறிப்பாக வெளிநாட்டுத் தொழில்களைத் தெரிவுசெய்யும் போது இது தொடர்பாக கவனஞ் செலுத்தவது பயனுடையதாகும்.

www.lkedu.lk

M.N.MUHAMMAD SUFIYAN [NDT Agri&Sci, BA, PGDE©]

M.N.MUHAMMAD SUFIYAN -(SLTS)
NDinTech Agri & Sci (VNCoEdu)
B.A (SEU of SL)
PGDE (OUSL) H.P 0776259116

www.lkedu.lk

☞ ஆசிரியரின் கற்பித்தல் சார்ந்த செயற்பாடுகள்

M.N.MUHAMMAD SUFIYAN – JP (SLTS)
T/KIN/KINNIYA MUSLIM LADIES COLLEGE [N.S]
NDinTeach Agri&Sci (VNCoEdu)
B.A (SEUofSL)
PGD in Edu (OUSL)
vaskinniya@gmail.com H.P 0776259116

கல்விப் பொதுத் தராதர உயர்தர மாணவர்களுக்கான

உயிர் முறைமைகள் தொழினுட்பம் - Bio Systems Technology (66)

&

விவசாய விஞ்ஞானம் - Agriculture Science (08)

ஆகிய பாடங்களுக்கான

www.lkedu.lk

- வகுப்புக்கள்
- அலகு ரீதியான பாடக்குறிப்புக்கள்
- மாதிரி வினாத்தாள்கள்
- மீட்டல் செயலமர்வு மொடியுள்கள்
- வினா – விடைத் தொகுப்புக்கள்
- உபகரண அமைப்புக்கள்
- செயன்மறை பரீட்சை பயிற்சி வழிகாட்டி
- வருகை தரு விரிவுரை வகுப்புக்கள்

உயிர் முறைமைகள் தொழினுட்பம் - Bio Systems Technology (66)

- **நிலையச் சோதனை – Spot Test**
- **செய்முறைப் பரீட்சை – Prectica Test**

வகுப்பு நடைபெறுமிடம்

Royal Academy
infront of HNB, Kinniya.
H.P 0775333471